1981 ஏப்ரல் 4,

5 அரசினர் சட்ட முன்வடிவுகள்

அ. வாடகை வண்டி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாடகை வண்டி (திருத்தச்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதிக்க வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

ஆ. கால்நடை மருத்துவர்கள் பதிவு (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். 1981 ஆம் ஆண்டு கால்நடை மருத்துவர்கள் பதிவு (திருத்தச் சட்ட முன்வடிவு) சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 16–1981 *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.'

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின்மீது என்னுடைய கருத்துக்களை நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சொல்ல விரும்புகிறேன். நான் கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தை வலியுறுத்தி என் கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவை சாதாரணமாகப் பார்க்கிறபோது, மேலெழுந்த வாரியாகப் பார்க்கிறபோது இது ஒரு சாதாரண சட்டத்திருத்தமாகத்தென்படும். மூர்த்தி சிறியதானாலும் கீர்த்தி பெரியது என்று சொல்வதுபோல் பல்வேறு விவகாரங்களை உள்ளடக்கி இருக்கிறது இந்தச் சட்டமுன்வடிவு.

எதற்காக இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருகிறார்கள் என்பதற்கு, இந்த மசோதாவினுடைய காரண காரிய நோக்கத்தில் ஒரு சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். 1957ஆம் ஆண்டு கால்நடை மருத்துவர் பதிவுச் சட்டம் தமிழ் நாட்டில் இயற்றப்பட்டு, கடந்த 24 ஆண்டு காலமாக இந்த பராமரிப்புத் துறையிலே பல்வேறு மாறுதல்கள் செய்யப்

---

*1981-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5 ஆம் தேதியிட்ட தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.